சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2008 | தை 13 | ஸபர் 5 (26-1-77) புதன் | புத்தகம் 30 | இதழ் 80

# "தமிழ் ஈழ நாட்டைவிட்டு வெளியேறுக!"

## ஐ. நா. பொதுச் சபைத் தலைவருக்கு லண்டன் தமிழர்கள் கடிதம்!

'உங்கள் நாட்டுப் பிரதமருக்கு ஈடில்லாப் பெருமையும், மரியாதையும் உலக அரங்கில் கிடைத்துள்ளதையிட்டு வெளிநாடுகளில் வாழும் கைப்பற்றப்பட்ட ஈழத்தைச்சேர்ந்த தமிழர்களாகிய நாம் அவருக்குப் பாராட்டுத்தெரிவிக்கிறோம். ஈழத்தமிழர் மீது உங்கள் நாடு செலுத்திவரும் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் அமைதியான முறையில் கைவிடுமென்றும் நிராயுத பாணிகளான ஈழநாட்டுத் தமிழர்களையும் முஸ்லிம்களையும் தொடர்ந்தும் படுகொலை செய்யாதமுறையில், தமிழ் ஈழப் பிரதேசங்களிலிருந்து சிங்கள ஆயுதப்படைகள் வாபஸ் பெறப்படும் என்றும் எதிர்பார்க்கிறோம்!''

—மேற்கண்டவாறு ஐ. நா. பொதுச்சபையின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டிருக்கும் இலங்கைப் பிரதிநிதி ஷேர்லி அமரசிங்காவுக்கு லண்டனில் வாழும் ஈழத் தமிழர்கள் சார்பில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. நியூயார்க்கிலுள்ள ஐ. நாடுகள் சபை முகவரிக்கு இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. லண்டனிலுள்ள ஈழத் தமிழர் கழகமே இதை அனுப்பிவைத்துள்ளது. 21-1-77ல் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முழுவிபரமும் வருமாறு:-

சிறீலங்காவின் கௌரவபிரதிநிதி,
பொதுச்சபைத் தலைவர்,
ஐ. நா. சபை,
நியூயார்க்,
அமெரிக்கா.

அன்புள்ள தலைவர் அவர்களே,

மனிதஉரிமைப்பிரகடனத்தில் கைச்சாத்திடுதல்

"1948ம் ஆண்டு டிசெம்பர் 10ம் நாள் ஐ. நா. பொதுச்சபையினால் மனித உரிமைகள் பற்றிய பிரகடனம் நிறைவேற்றப்பட்டு, இப்போது 28 ஆண்டுகள் கழிந்துவிட்ட போதிலும், ஐ. நா. சபையில் அங்கத்துவம் வகிக்கும் 158 நாடுகளில், ஆக 35 நாடுகளே இதுவரை அதில் கைசாத்திட்டுள்ளதாக அறிந்து மிகவும் வருந்துகிறோம்!


"உங்கள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா அவர்கள், தனது துணிவினாலும், ஏகாதிபத்தியம், இனவெறி, அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராக சர்வதேசிய ரீதியில் நாகரிகமான கொள்கையைக் கடைப்பிடித்ததனாலும், அணிசேரா

—4-ம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் இல்லாத இலங்கைப் படம்!

ஈழத்தமிழர்களின் பிரதான பட்டினமாகிய யாழ்ப்பாணத்தையும், யாழ் குடாநாட்டையும் கிள்ளிவிட்டு— வெறும் மூளியான இலங்கைப்படம் ஒன்றை, "இது தான் இலங்கை'' யென்று கூறி வெளியிட்டிருக்கின்றது — வெளிநாடொன்றிலுள்ள உல்லாசப் பிரயாண சேவை நிறுவனம் ஒன்று.

அவுஸ்திரேலியாவிலுள்ள "நேஷனல் பாங்க் ட்றவல் சேர்வ்ஸ்'' (National Bank Travel Service) என்ற இந்தப் பிரயாண சேவை நிறுவனம், 15 நாட்களில் இலங்கை, இந்தோனேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு உல்லாசப் பிரயாண சேவை யொன்றை நடத்தி வருகிறது. இதையொட்டி




அந்த நிறுவனம் அவுஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்ன் நகரில் ஒரு விளம்பரத்தாளை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

மேற்கண்ட விளம்பரத்தாளில் இடம் பெற்றுள்ள இலங்கைப் படத்தையே மேலே தந்திருக்கிறோம். இலங்கையின் பிரதான நகரங்களில் ஒன்றாகிய யாழ்ப்பாணம் இல்லாமல் மூளியாகக் காட்சிதருகிறது இந்த இலங்கைப்படம். இந்தப் படத்தைமேற்படி நிறுவனத்

—4-ம் பக்கம் பார்க்க

## இலங்கையில் பொதுத்தேர்தல் எப்போது?

இந்திய நாடாளுமன்றம் திடீரெனக் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடைபெறவிருப்பதையடுத்து — இங்கும் அடுத்த பொதுத்தேர்தல் பற்றியே எங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டுவருகிறது. இலங்கையில் எப்போது பொதுத்தேர்தல் நடைபெறும் என்ற கேள்வியே ஒவ்வொருவர் வாயிலும் இன்று எழுகின்றன.

புதிய அரசியல் சட்டப்படி 1977 மே 22ம் திகதியுடன், தேசிய அரசுப் பேரவையின் ஆயுள் முடிவடைகிறது. எனவே அதற்குமுன்னர் பேரவை கலைக்கப்படுமா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

சென்றவாரம் தேசிய அரசுப்பேரவைக் கூட்டத்துக்குள் அடுத்த பொதுத்தேர்தல் எப்போது நடக்கும் என்பது குறித்த பலவித ஆரூடங்கள் அரசாங்க, எதிர்க்கட்சிப் பா.உ.க்களிடையே பரவலாக அடிபட்டன.

மார்ச் இறுதியில் தேசிய அரசுப் பேரவை கலைக்கப்படலாமென்றும், ஜூன் மாதம் நடுப்பகுதியில் பொதுத்தேர்தல் நடைபெறலாமென்றும் இந்தப் பேச்சுக்களின்போது அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது!

—3-ம் பக்கம் பார்க்க

## தமிழ்த் தியாகிகள் நினைவுச் சின்னம்!



யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் 10-1-77ல் நிறுவப்பட்டுள்ள தமிழ்த் தியாகிகள் நினைவுச் சின்னத்தையும், அச்சின்னத்துக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதையும் பின்னணியில் வீரசிங்கம் மண்டபத்தின் தோற்றத்தையும் படத்தில்காணலாம். வீரசிங்கம் மண்டபத்தில் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற போதே பொலிசார் தாக்குதல் நடைபெற்று அதன்பயனாக ஒன்பதுபேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# வித்தியாலங்கார வளாகத்தில் தமிழ், முஸ்லிம், மாணவர்கள் படும் அவதி!

**பண்டிதர் கா.பொ. இரத்திரம் பா.உ.**

வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் 1972 தொடக்கம் சில தமிழ் மாணவர்களைச் சேர்த்தார்கள். இதற்கு முன்னர் அங்கு சிங்கள மாணவர்கள் மட்டுமே படித்தார்கள். சிங்கள மாணவர்கள் படித்த தனிச் சிங்கள பல்கலைக் கழகங்களாக இருந்த பல்கலைக் கழகங்களிலே தமிழ் மாணவர்களும் படிக்க இடம் கிடைக்கச்செய்தார்கள். இதை எதற்காகச் செய்தார்கள் என்றால் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்திலே சிங்கள மாணவர்களுக்கும் இடம்கொடுப்பதற்காகத் தான்.


வித்தியாலங்கார வித்தியோதய சிங்கள பல்கலைக் கழகங்களிலே தமிழ் மாணவர்களைப் புகுத்திய பிறகு அங்கு என்ன நடந்தது? 1973, 1974, 1975ஆம் ஆண்டுகளிலும் இந்தப்பல்கலைக் கழகங்களில் சில தமிழ்மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். ஆனால் வித்தியாலங்கார பல்கலைக்கழகத்திலே தமிழ்மாணவர்கள் படிக்கும் பாடங்களுக்கு வேண்டிய விரிவுரையாளர்களும் ரியூற்றர்களும் நியமிக்கப்படவில்லை. வேறு வாய்ப்புக்களும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்தக் குறை நீண்டகாலம் நீடித்தது.

தமிழ்த் துறைகளுக்குப் போதிய விரிவுரையாளர்கள் நியமிக்கப்படாமையால் அங்கே உள்ள தமிழ் மாணவர்களும் சிங்கள மாணவர்களும் சேர்ந்து 1976இல் வித்தியாலங்கார பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களது குறைகளை நீக்குமாறு கிளர்ச்சி செய்தார்கள். வேலை நிறுத்தமும் செய்தார்கள். கடைசியாக வித்தியாலங்கார பல்கலைக்கழக வளாகம் அங்கே படிக்கும் தமிழ் மாணவர்களைக் கொழும்பு வளாகத்திற்கு அனுப்ப ஒழுங்குகளைச்செய்தது. இதையும் சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர்களும் எதிர்த்தார்கள் ஏனெனில் கொழும்பு வளாகத்தில் படிப்பிக்கப்படும் — கல்வி நெறிமுறை வேறு என்பதனாலேயே.

தமிழ் மாணவர்களது கல்விக்கு வேண்டிய விரிவுரையாளர்களை நியமிக்க வேண்டுமென்றுகோரி தமிழ் மாணவர்களும் சிங்கள மாணவர்களும் வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து கிளர்ச்சிசெய்தார்கள். அவர்கள் இதுவிடயமாக பல்கலைக்கழக துணைவேந்தருடனும் பேசினர். எனினும் இன்றுகூட வித்தியாலங்கார பல்கலைக்கழகத்திலே தமிழ் மாணவர்களுக்கும் முஸ்லிம் மாணவர்களும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. வேண்டிய விரிவுரையாளர்களோ ரியூற்றர்களோ நியமிக்கப் படவில்லை.

உதாரணமாக பொருளியல், புவியியல், தத்துவம் ஆகிய துறைகளில் விசேட வகுப்புக்கள் இருந்தும் இந்த விசேட வகுப்புக்களுக்கெல்லாம் நிரந்தரமான விரிவுரையாளர்கள் நியமிக்கப்படவில்லை. இப்படியாகப் பல துறைகளிலே நிரந்தர விரிவுரையாளர்கள் இல்லாமல் அங்கு நான்கு ஐந்து வருடங்களாக தமிழ், முஸ்லிம் மாணவர்கள் கஸ்டப்படுகின்றார்கள்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் நிலையோடு யாழ்ப்பாண வளாகத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். வித்தியாலங்கார மாணவர்கள் கேட்டால் வேண்டிய வசதிகள் செய்து தரப்பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். யாழ்ப்பாண வளாகத்தில் தமிழ் மாணவர்களும் படிக்கிறார்கள்; சிங்கள மாணவர்களும் படிக்கிறார்கள். வித்தியாலங்கார பல்கலைக்சழகத்தில் தமிழ் மாணவர்கள் சேர்க்கப்பட்ட பின்னரே யாழ்ப்பாண வளாகம் தொடங்கப்பட்டது. யாழ்ப்பாண வளாகத்தில் தமிழ்மாணவர்களைக் கற்பித்தற்கு எப்படி விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுகிறார்களோ அதே போன்றே சிங்கள மாணவர்களைக் கற்பித்தற்கும் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் இதைப்போல வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்குப்போதிய விரிவுரையாளர்கள் நியமிக்கப் படவில்லை. ஏன் என்று கேட்டால் நிதி இல்லை என்று காரணம் சொல்கிறார்கள். அது சரியான காரணமாகாது;



வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் தமிழ் பகுதிக்குவேண்டிய விரிவுரையாளர்களை நியமிக்க வளாகத் உத்தியோகத்தர்களும் பின்நிற்கிறார்கள் என்பது எமக்குத் தெரியும். ஏனெனில் அவர்களுடைய கருத்து என்னவென்றால் தமிழ் மாணவர்களை அங்கே இருந்து அனுப்பிவிடவேண்டும் என்பதுதான். வித்தியாலங்காரப் பல்கலைக் கழகத்தைத் தனிச்சிங்கள பல்கலைக்கழகமாக நடத்தவே அவர்கள் சூழ்ச்சி செய்கிறார்கள். ஆகவே இந்தச் சூழ்ச்சிக்கு இடம் கொடுக்காமல் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு வேண்டிய வாய்ப்புக்களை அமைச்சர் உடனே செய்துகொடுக்க வேண்டியது கடமை என்பதை இவ்விடத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்;

இந்த விடயத்தில் தமிழ், முஸ்லிம் மாணவர்களைப் புறக்கணிப்பது எந்த வகையிலும் நீதியாகாது. பல்கலைக்கழக சூதாட்ட அரங்கில் தமிழ், முஸ்லிம் மாணவர்களைப் பகடைக்காய்களாக ஆட்டி வைக்காமல் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அடுத்து ஆண்டிலிருந்தாவது பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சபையில் வற்புறுத்த விரும்புகிறேன்.

(தேசிய பேரவையில் பேசியது)

---

# சுதந்திரத்துக்கு நம்மை நாமே அருகதையுள்ளவர்களாக்குவோம்!

## கருத்தரங்கில் கதிவேற்பிள்ளை பா. உ. வலியுறுத்து!

சுயநிர்ணய உரிமை அடிப்படையில், வரலாற்று அடிப்படையில் தமிழன் தமிழீழம் காண உரிமை நிறைய உண்டு. ஆனால் இன்னும் அவன் தகுதி அடையவில்லை. பிரதேச வேறுபாடு, சமய வேறுபாடு, சாதி வேறுபாடு எனப் பலவகையாகப் பிரிந்து, பிளவுபட்டு, பஞ்சையாய்ப்பராரியாய்ப் பிச்சைக் காரனாக நிற்கிறான். என்று அவன் வேறுபாடுகளை மறந்து, கலந்து ஒன்றுபட்டுப் போராடுகிறானோ அன்றுதான் அவன் தமிழீழம் காண முழுத் தகுதியுள்ளவனாக மாறுகிறான். அந்த நிலையை அவன் வெகுவிரைவில் அடையவேண்டும் அப்போதுதான் அவன் இத்தரணியில் தலைநிமிர்ந்து வாழ முடியும்.''


மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் புங்கங்குளத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்கில் உரையாற்றும்பொழுது கோப்பாய் தே; பே. உ. திரு. கதிரவேற்பிள்ளை ஆணித்தரமாகக் குறிப்பிட்டார். சட்டத்தரணி வை. யோகேஸ்வரனின் தலைமையில் இக் கருத்தரங்குநடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் உரையாற்றும் பொழுது, "தற்போது வரலாற்றுப் புத்தகங்கள் அனைத்தும் உண்மையை திரித்து எழுதியுள்ளன. தமிழன் ஆண்ட வரலாற்றை மறைத்து வந்தேறு குடிகள் எனக் காட்டும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே தமிழன் படித்ததை மறந்து மறந்ததைப் படிக்கவேண்டும். உண்மை வரலாற்றை அறிந்துகொண்டு தமிழீழம் காணப்போராடவேண்டும்'' என்றார்.

அடுத்துப்பேசிய இளைஞர் பேரவை இடைக்கால அமைப்பாளர் திரு.ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், "கைதட்டல்கள் இல்லாமல், மலர் மாலைகள் இல்லாமல், அமைதியான கருத்தரங்குகளையே நாங்களும் விரும்புகிறோம் இதுகூட விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியாகும். தேர்தல் வரப்போகிறது என்ற நினைப்பிலோ அன்றி வாக்குக் கேட்கும் எண்ணத்திலோ இங்கு நாம் வரவில்லை. எம்மைப் பொறுத்தவரை ஆயிரம் ஆயிரம் பேர் வந்து கைதட்டிப் போவதைவிட விடுதலை இயக்கத்தில் உறுதியான பத்துப் பேர் இருப்பதை மனமார வரவேற்கிறோம். எனவேதான் எமது கருத்துக்களைப் பரப்ப, கவிஞன் காசி ஆனந்தன் [illegible]னதுபோல், "கூண்டுக்கிளி நிலை எத்தனை நாள்வரை, கூப்பிடு வீரர்களை!'' என்றது போல் வீரரை, அதுவும் உறுதியான, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிகுந்த வீரர்களைச் சேர்க்க இம்மாதிரியான கருத்தரங்குகளைப் பயன்படுத்துகிறோம்'' என்றார்.

மற்றும் சட்டத்தரணிகள் விஸ்வநாதன், அருணசலம், திரு. குணரத்தினம், தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. சிவதாசன், திரு. வாமதேவன் ஆகியோரும் உரையாற்றினர்.

பாசையூரில் ஆசிரியர் திரு. அழகையா தலைமையிலும் அதே நாளில் கருத்தரங்கு இடம்பெற்றது. (7-1-77)



---

# பாண்டியன் குளத்தில் உழவர் விழா

பாண்டியன் குளத்தில் 14-1-77 பொங்கல் திருநாளில் வெகுகோலாகலமாக சு. பசுபதிபிள்ளை அவர்கள் தலைமையில் உழவர் விழா ஆரம்பமாகியது. பிரதம அதிதியாக வவுனியா தேசிய பேரவை உறுப்பினர் திரு. செல்லத்தம்பு அவர்கள் கலந்துகொண்டு தமிழ்ஈழப் பொருளாதாரம் பற்றி புள்ளிவிபர அடிப்படையில் விளக்கம் அளித்தார். அதனை தொடர்ந்து கருத்தரங்கு திரு. அ. தணிகாசலம் தலைமையிலும் கவியரங்கு "பூக்கட்டும் புது நாடு'' என்னும் தலைப்பில் இளம் கவிஞன் சிவசம்பு தலைமையிலும், சிறுவர் அரங்கு திரு. எஸ். ஆர். பாலசிங்கம் தலைமையிலும், நாடக அரங்கு திரு. வீ. சின்னையா தலைமையிலும் நடைபெற்றது.

சிறந்த நான்கு நாடகங்கள்மேடையேற்றப்பட்டன. அதில் பாண்டியன்குளம் பொதுப்பணி நாடகமன்றம் உலகில் இரண்டாவது தடவையகவும்இலங்கையில்முதலாவது தடவையாகவும் மேடையேற்றிய "இலங்கை மீண்டும் எரிகின்றது'' என்ற அரசியல் நாடகம் வெகு சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்றது. கவிஞர் காசி ஆனந்தன் அவர்களை சிறையில் வைத்து துன்புறுத்தும் காட்சியைக் கண்டதும் மக்கள் வெள்ளம் கோவெனகதறி அழுத காட்சியைக் காணக்கூடியதாக இருந்தது.

அதனை தொடர்ந்து கலைமகள் நாடக மன்றத்தின் "அடிமைக்கு அரசன்'' ஜெயாலிங்கம் புரடக்சன் அளித்த "கல்லூரி மாணவி'' ஸ்ரீவிநாயக நாடகமன்றம் அளித்த "விதி'' ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

இதனை தொடர்ந்து பாண்டியன்குளம் தமிழர் விடுதலை கூட்டணி உபசெயலாளர் திரு. கா. சுப்பிரமணியம் அவர்களின் நன்றியுரையுடன் இனிது முடிவடைந்தது.

---

# தமிழ் இளைஞர் பேரவை ஸ்கந்தபுரம் நிர்வாகிகள்

ஸ்கந்தபுரம் த. வி. கூட்டணி காரியாலயத்தில் தலைவர் திரு. சி. கந்தசாமி தலைமையில்நடைபெற்றகூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட த.இ.பே. நிர்வாகிகள் வருமாறு:— தலைவர்: சி. பொன்னம்பலம். உபதலைவர்: சி. சதானந்தம். செயலாளர்: த. சண்முகநாதன். உபசெயலாளர்: வை. கணபதிப்பிள்ளை. பொருளாளர்: சி. குட்டிப்பிள்ளை. செயற்குழு உறுப்பினராக ஒன்பது பேர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பிட்டிவாழ் தமிழர்கள் ‘பெருந்தன்மையாற் கெட்ட’ சோகக் கதை!

1956ம் ஆண்டிலிருந்தே கற்பிட்டிப் பகுதியில் தமிழ்க் கிறீஸ்தவர்கள் திட்டமிட்டு நசுக்கப்பட்டுவருவதை ஆதாரபூர்வமான நிகழ்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன. கற்பிட்டிப் பகுதியிலுள்ள தமிழ்க் கிறீஸ்தவர்கள் அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் அனாதைகள்போல வாழ்வதற்கு அடிப்படையாக அமைந்தது சிங்களவர் ஆட்சியென்பது தீர்க்கமாகத் தெரிந்துவிட்டது. இதேபோன்று இன்னும் எத்தனை பகுதிகள் இனவெறியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டதோ யாரறிவர்?—

கற்பிட்டியிலுள்ள கிறீஸ்தவர்கள் பரம்பரை பரம்பரையாக தமிழையே தாய்மொழியாகக் கொண்டு வாழ்ந்துவருபவர்கள். அங்குள்ள கோயிலும் தமிழராலேயே நிர்வகிக்கப்பட்டு, அருகேயுள்ள பாடசாலையும், றேமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயரைத் தாங்கி தமிழ்க் குழந்தைகளின் கல்வி கருதியே நடாத்தப்பட்டுவந்தது.

1956 லிருந்து கோயிலுக்கும் பாடசாலைக்கும் பிடித்தது தலைவலி. அந்தத் தலைவலி சிங்கள வெறி என்ற உருவத்தில் காலடிவைக்கத் தொடங்கியது. அதிகமாக மீனவர் வாழும் பகுதியாக கற்பிட்டி விளங்கியதால் சிங்கள மீனவர்கள் ஒருவர் இருவராக, இருவர் பலராஞர்கள். குழந்தைகளும் பெருகத் தொடங்கின.

“விட்டுக் கொடுப்பவனும் தமிழன், கொடுத்துவிட்டு இன்று துடித்துக்கொண்டிருப்பவனும் தமிழன்தானே” அன்று, சிங்களக் குழந்தைகளும் கற்றுவிட்டுப் போகட்டும். என்று கிறீஸ்தவ அன்போடு இடம் கொடுத்தான் தமிழன. கற்பிட்டிக்கே தாய்ப்பாடசாலை என்ற பெயரைத்தாங்கி, பல அறிவாளிகளை உருவாக்கிய அந்தப் பாடசாலையில் சிங்கள வகுப்பொன்றும் ஆரம்பிக்கப்பட்டது. அதுவும், பெருந்தன்மையோடு, எல்லோரும் வாழவேண்டும் என்ற பரந்த நோக்கில். ஆனுல், “வளர்த்த கடா மார்பில் பாயுமென்று” யார் கண்டார்கள். ஒரு வகுப்பு இரண்டாகி, இரண்டு மூன்ருகி, மூன்று நான்காகி, நான்கும் ஐந்தாகியது. பொதுவாகப் பாடசாலையிலே பிள்ளைகள் அதிகரித்ததால் புதுக்கட்டடமொன்றும் கட்டப்பட்டது. ஆனுல் பாடசாலைக்கு அடிப்படையாக அமைந்தது தமிழர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

புதுக்கட்டடமும் கட்டியாகிவிட்டது: சிங்களக் குழந்தைகளும் அதிகரித்துவிட்டார்கள். எனவே அவர்களுக்கு வசதியாக அதில் பாதியைப் பிரித்துக்கொடுத்தான் — பெருந்தன்மையோடு தமிழன். ஆனுல் நடந்தது—என்ன தெரியுமா? “ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த நிலையில்” அப்போது சிங்களம் கற்பிக்க வந்த இனவெறி பிடித்த ஒரு ஆசிரியஞல் திட்டமிட்டு, அரசாங்கத்தின் உதவியோடு புதுக்கட்டடம் தற்காலிகமாகச் சிங்களவர்களுக்கென்றே சுவீகரிக்கப்பட்டது.

இது மாத்திரமின்றி கேவலமான முறையில், இன்றிருக்கின்ற இனப்பித்துப் பிடித்த சிங்களத் தலைமையாசிரியனெருவன் கூட தமிழ்ப் பிள்ளைகளுக்கென்றே ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட மலசலகூடத்தைக்கூட இன்று அவர்களுக்குப் பாவிக்கத் தடைவிதிக்கின்ருனும். எப்படி இருக்கின்றது, கதை பார்த்தீர்களா? மனிதாபிமான முறையில்கூட சிங்கள இனத்துக்கு உதவி செய்வதுகூடத் தவறென்பது நன்கு புலஞகின்றதல்லவா? இந்த இலட்சணத்தில் எங்களுக்கு சிங்களவர்களோடு என்ன உறவுவேண்டிக் கிடக்கின்றது....

பாடசாலையின் தலைவிதி அப்படியிருக்கக் கோயிலின் நிலையோ, பேசவே முடியாதவாறு மோசமடைந்து வருகிறது.

முன்னர் ஆராதனைகள் யாவும் கோயிலிலே தமிழில் நடைபெற்று வந்தன. சிங்கள இனம் அதிகரிக்க, ஒவ்வொரு பூசையிலும் ஒரு சிறிய பகுதி மனிதாபிமான முறையில் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது, அன்றிலிருந்து கோயில் நிர்வாகத்துக்கும் தொட்டது.

சிறிதாகப் பூசையிலே கொடுக்கப்பட்ட பகுதி பெரிதாக உருவெடுக்கத் தொடங்கியது. ஆமாம், “நாங்கள் சற்று அதிகரித்துவிட்டோம்; பூசையிலே ஒரு பெரிய பகுதியை எங்களுக்குத் தாருங்கள்” என்று கிளர்ச்சி செய்தார்கள் சிங்களக் கிறீஸ்தவர்கள். அவர்களும் மனிதர்கள்தானே. “தன்னை நேசிக்குமாப்போல் பிறரையும் நேசிப்பாயாக” என்று கிறீஸ்துவே — கூறியிருக்கின்ருர். ஆகவே, ஒரு பெரிய பகுதி பூசையிலே கொடுப்பதைவிட்டு மாதத்திலே ஒரு பூசையைச் சிங்களவர்கள் நடாத்திக்கொள்ளட்டும் என்று மனமிரங்கிக் கொடுத்தார்கள் கிறீஸ்தவர்கள். அதுவும் அங்குள்ள கட்டளைக்குருவானவரின் அனுமதியோடு.

காலமும் ஓடியது. காய்ந்த மலத்தைத் தின்றுவந்த பன்றி பச்சை மலத்தையும் ஒரு கை பார்த்துவிடவேண்டும்” என்று நாக்கைச் சப்பிக்கொண்டதாம். இதேபோன்று “திருநாட்களிற்கூட எங்களுக்குப் பங்கு தாருங்கள், கூடவே, மாதத்துக்கு ஒரு பூசை எங்களுக்குப் போதாது, இரு கிழமைகளில் ஒரு பூசையைத் தமிழில் நடாத்த மற்றையதைச் சிங்களத்திலே தாருங்கள்” என்று கூக்குரலிடத் தொடங்கிஞர்கள். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று எண்ணிய தமிழர்கள், இறுதியாகக் கற்பிட்டிக் கோயிலை நிர்வகிக்கின்ற தலைமை பங்குக் குருவானவரிடம் சென்று இரு கிழமைகளில் ஒன்றைச் சிங்களத்திலே நடாத்த அனுமதிக்குமாறும், மார்கழி மாதம் எட்டாம் திகதி நடைபெறுகின்ற திருநாளை சிங்களவர்கள் கொண்டாடிக் கொள்ளட்டும்” என்று மனமிரங்கி விட்டுக்கொடுத்தார்கள். இதேவேளை பங்குக் குருவானவர்கூட இதற்கு மேல் சிங்களவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் கோயில் விடயத்தில் காட்டப்படமாட்டாது என்று உறுதி கூறிஞர்.

ஆஞல் நடந்த கதை தெரியுமா? இப்போது, “எல்லாத் திருநாட்களிலும் சரிபாதி எங்களுக்குப் வேண்டும்” என்று காட்டுக் கூச்சல் போடுகின்ருர்கள் சிங்களக் கிறீஸ்தவர்கள். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, இன்று மனிதனையே கடிகக வருகின்ற சிங்கள இனத்துக்கு எதற்காக மனமிரங்கிஞேம்? எதற்காக மனிதாபிமானத்தை அவர்கள்மீது பொழிந்தோம்? என்று இன்று துக்கப்படவேண்டியிருக்கிறது. பாம்புக்குப் பால்வார்த்ததால் பயன் ஏற்பட்டுவிட்டது.

இத்தோடு கூட அவர்கள் விட்டுவிடவில்லைபோல் தெரிகின்றது. இப்போது அந்தத் தமிழ்க் கிறிஸ்தவப் பாடசாலையிலே தலைமையாசிரியரே இல்லாத நிலை காணப்படுகின்றது. அதுவும் மூன்ரும் பருவப் பரீட்சை நடாத்தபபடவிருந்த நிலையில் அங்கிருந்த தலைமையாசிரியர் மாற்றப்பட்டார். திட்டமிட்டுச்செய்யப்படுகின்ற இந்த அக்கிரமங்களுக்குக் காரணகர்த்தா யா? இதையிட்டுக் கல்வியதிகாரிகளோடு தொடர்பு கொண்டபோது தீர்க்கமான முடிவும் கிடைக்கவில்லை. இந்தக்குறை எப்போது தீரும்?

இது மட்டுமா? அந்தத் தமிழ்ப் பாடசாலையிலே நடைபெற்ற பெற்ருர் தினக்கூட்டத்திலே, தலைவில் பங்கு குரு” இந்தப் பாடசாலையைச் சிங்களவர்களுக்கே கொடுத்துவிட்டு தமிழ்மாணவர்கள் வேருரு பாடசாலைக்குச் சென்று கல்வி கற்கட்டும்” என்று கூறிஞராம். அவர்களது இனவெறிபிடித்த பேச்சு எப்படியிருக்கின்றது பார்த்தீர்களா? யேசுநாதரின் தியாக வாழ்க்கையை, அன்பு வார்த்தைகளைப் போதிக்க வந்தவர்கள் மனதிலே அழுக்குப் படிந்திருப்பதை இது தெளிவுபடுத்தவில்லையா?

இப்படித் திட்டமிட்டே செய்யப்படுகின்ற அக்கிரமங்கள் தொடர்ந்துச் செயற்படமுடியாது. எப்போதும் தலையைக் குனிந்து கொடுத்துக் குட்டு வாங்கிக் கொண்டிருக்கத் தமிழர்கள் மடையர்களல்லர். பல பேரைப் பலிவாங்கிய புலி, நிச்சயமாகக் குண்டுக்கு இரையாகவே செய்யும்.

[illegible]

## “எம்மை நோக்கி வருக”

“தோழர் வி. பி. யுடைய கொள்கை வழித் தாயகம் உருசியா. அங்கு நடப்பது சமஷ்டி ஆட்சி. அப்படியிருந்தும், இங்கு தமிழரசுக் கட்சி சமஷ்டிகேட்டபோது அவர் அதை ஆதரிக்கவில்லை. பிரதேச சுயாட்சி கேட்டு வந்தார். இன்று த. வி. கூ. தனிநாடு கேட்க, அவர் பிரதேச சுயாட்சியை விட்டு சமஷ்டி ஆட்சி தொடங்கிய செக்கோசிலவாக்கியாவைப் பின்பற்றக் கேட்கிருர். நேற்று நாம் கேட்டதை இன்று அவர் கேட்கிருர். இன்று நாம் கேட்பதை நாளை அவர் கேட்கத்தான் போகிருர். சமஷ்டிகேட்ட எங்களைத் தனிநாடு கேட்கும் நிலையை உருவாக்கிய—அவர் சார்ந்திருக்கின்ற அரசியல் கட்சியின் தலைமைப்பீடமும் அது சார்ந்திருக்கும் அரசும் வெகு விரைவில்இதைஉணரும். எங்களை நாடிவரும் அவரை வரவேற்கிறேன். எங்கள் கொள்கையை ஏற்றுவரும் அவரை எங்கள் இயக்கமும் ஏற்றுக்கொள்ளக்கூடும்.

— சட்டத்தரணி கனக மஞேகரன்

(தோழர் வி. பி. கலந்துகொண்ட விழாவொன்றில் பேசியது.)

## கொழும்பில் சுபாஷ் சந்திரபோஸ் நினைவு விழா!

தமிழர் விடுதலைக் கூட்டணி — கொழும்புக் கிளை நடத்தும் வாராந்தக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை (26-1-77) மாலை 6மணிக்கு பம்பலப்பிட்டி லொறிஸ் வீதி 51ம் இலக்க இல்லத்தில் இந்திய விடுதலை வீரர் “சுபாஷ் சந்திரபோஸ்” நினைவு தினமாக நடைபெறுகிறது. இக்கூட்டத்தில், முன்ஞள் மூத்த தூதுவர் திரு. யோகேந்திரன் துரைசாமி “இந்திய விடுதலையில் மகாத்மாவும் சுபாசும்” என்ற தலைப்பில் உரையாற்றுவார். முதலியார் சின்னத்தம்பியும் பேசுவார். திரு. ஈழவேந்தன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

## உடையார் கட்டில் விவசாயப் பண்ணை ஆரம்பம்!

அண்மையில் பரந்தனில் ஆரம்பிக்கப்பட்ட ஈழத்தமிழர் பொருளாதார, அபிவிருத்திச் சங்கம், உடையார் கட்டில் விவசாயப் பண்ணை ஒன்றை நிறுவியுள்ளது. இதைத்தொடர்ந்து நெசவு நிலையம் ஒன்றையும், சிறு கைத்தொழில் நிலையம் ஒன்றையும் ஆரம்பிக்கும் முயற்சியில் மேற்படி சங்கம் இப்போது ஈடுபட்டுள்ளது.

## அனுதாபம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளரும் பட்டிருப்புத் தொகுதி களுதாவளை தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் தலைவருமான ஞா. பழனித்தம்பி (திராவிடத்தம்பி) அவர்களின் தந்தை க. ஞானமுத்து காலமானதையிட்டு களுதாவளை த. வி. கூ. கிளையினர் ஞா. பழனித்தம்பியின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை சுதந்திரன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இலங்கையில்...

—1-ம் பக்கத் தொடர்

அதே நேரத்தில் இந்தியாவில் நடப்பதுபோல் இங்கும் அவசரகாலச்சட்டம் முற்ருக நீக்கப்படாமல், அச்சட்டத்தின் சில விதிகளை தளர்த்திவிட்டுத் தேர்தல் நடைபெறுமா அல்லது, அவசரகாலச் சட்டம் முற்ருக அகற்றப்பட்டு தேர்தல் நடைபெறுமா என்ற கேள்வியையும் அரசியல் அவதானிகள் எழுப்புகின்றனர்!

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதில் இந்தியாவிலுள்ள நிலைமைக்கும், இலங்கையிலுள்ள நிலைமைக்கும் வேறுபாடு உண்டு. இந்தியாவில் அவசரகாலச்சட்டத்தை பிரகடனப்படுத்தும் அதிகாரம் இந்திய ஜனதிபதியிடம் உண்டு. இலங்கையிலோ தேசிய அரசுப்பேரவை ஒவ்வொரு மாதமும் கூடி அவசரகாலச் சட்டத்தை புதுப்பிக்காவிடின் அச்சட்டம் செல்லுபடியற்றதாகிவிடும். எனவே இங்கு அவசரகாலச் சட்டத்தின்கீழ் தேர்தலை நடத்துவதாக இருந்தால், தேசிய அரசுப்பேரவையில் அச்சட்டம் புதுப்பிக்கப்பட்டவுடன் சபை கலைக்கப்பட்டு, அவசரகாலச்சட்டம் செல்லுபடியாகக்கூடிய அடுத்த ஒரு மாதத்துக்கிடையில் பொதுத் தேர்தலை நடத்தி முடிக்கவேண்டியிருக்கும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.


### பொதுத்தேர்தலும் பிரதமர் கருத்தும்!

இதற்கிடையில் அடுத்த பொதுத்தேர்தல் பற்றி வியாங்கொடையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிரதமர் திருமதி பண்டாரநாயகா பின்வருமாறு பேசியிருக்கிருர்:-

“வேலைநிறுத்தத்தின் பயஞக—நான் ஒரு பெண்என்ற காரணத்திஞல்பயந்துபோய் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவேன் என்று சிலர் எதிர்பார்த்தார்கள். இத்தகைய பயமுறுத்தல்களுக்கு நான் பயப்படமாட்டேன். இத்தகைய பயமுறுத்தல்களுக்குப் பயந்து நான் பாராளுமன்றத்தைக்கலைக்கமாட்டேன். நான் நிச்சயம் தேர்தலை நடத்துவேன் ஆஞல் இத்தகைய சூழ்நிலையின்கீழ் நடத்தமாட்டேன். மக்கள் தங்கள் வாக்குகளை அளிப்பதற்கு வாய்ப்புத் தருவேன். ஆஞல் பல்வேறு அரசியற் கட்சிகளின் சதிகளைப் பற்றியும் நாம் ஆலோசிக்கவேண்டியிருக்கிறது!”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN



கடந்த 10-1-77ல் உலகத் தமிழ் மாநாட்டுத்தியாகிகளின் நினைவாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் மூன்ருவது தடவையாக நிறுவப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தையே மேலே காண்கிறீர்கள். நடுவிலே இடிந்து காணப்படும் நினைவுச்சின்னம் சென்ற ஆண்டு நிறுவப்பட்டது. அதைச் சுற்றியுள்ள ஒன்பது சின்னங்கள் இந்த ஆண்டு நிறுவப்பட்டன 1975ம் ஆண்டிலும், 1976ம் ஆண்டிலும் நிறுவப்பட்ட நினைவுச் சின்னங்கள் தமிழ்த் துரோகிகளாலும், ஆட்சியாளரின் படைகளாலும் இடித்துத்தள்ளப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆபீஸ் பையன் சொல்கிருன்!



"கொழும்பு மேற்குத் தொகுதியில ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு எதிராக தந்தை செல்வாவை நிறுத்தி ஜே. ஆரை தோற்கடிக்கலாம்; உதவிப் பிரதமராககூட வரலாம்" என்றெல் உளறியிருக்கிருர் நம்ம முத்திரை மந்திரி குமாரசூரியர். ஏன் குமாரசூரியரே! கிளிநொச்சிப் பக்கத்தில அலையாம கொழும்பு மேற்கில ஜே. ஆரோட நீரே போட்டியிடலாமே, ஏன்செல்வாவை வீணே இழுக்கிறீர்? அடுத்த தேர்தலோடு அரசியலில் அட்ரசே இன்றிப் போகவிருக்கும் நீர் தந்தை செல்வாவுக்கு உதவிப் பிரதமர் பதவி தரப்போகிறீரா—ஆஹாஹாநல்லஜோக்கையா இது! ஒன்று செய்யலாமே—குமாரசூரியரே நீர்கூட்டணியில் சேர்ந்தா தமிழ்ஈழத்தில் முத்திரை மந்திரியாக ஒருவேளை வந்தாலும் வரலாம்!" என்கிருன் நம் ஆபிஸ் பையன்.

## தமிழ் ஈழ நாட்டை...

—1-ம் பக்கத் தொடர்

நாடுகளின் பேராதரவைப் பெற்று—கொழும்பில் அணிசேரா நாடுகளின் மாநாட்டை நடத்தும் பெருமையையும் பெற்று — அணிசேரா நாடுகளின் தலைவி என்ற நிலைக்கும் உயர்ந்துவிட்டார். இதுமட்டுமன்றி நீங்கள் ஐ. நா. சபையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதும், இலங்கைப் பிரதமருக்குக் கிடைத்த ஒரு கௌரவமாகும்.

"இத்தனை புகழையும் பெருமையையும் சம்பாதித்தற்காக வெளிநாடுகளில் வாழும் (கைப்பற்றப்பட்ட) ஈழத்தைச் சேர்ந்த தமிழர்களாகிய நாம் உங்கள் பிரதமருக்கு எங்கள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

"ஈழத்தமிழர்கள் மீது உங்கள் நாடு செலுத்திவரும் ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும் அமைதியான முறையில் கைவிடுமென்று எதிர்பார்க்கிறோம். அத்துடன் மேற்கொண்டும் ஈழத்தமிழர்களையும், முஸ்லிம்களையும் கொன்றொழிக்காத முறையில், தமிழ்ஈழத்தின் கண்காணிப்புக்காக நிறுத்தப்பட்டிருக்கும் சிங்கள இராணுவம், அங்கிருந்து மீளப்பெறப்படும் என்றும் எதிர்பார்க்கிறோம். இப்படிச் செய்வதன்மூலம் சிறிலங்கா, தமிழ்ஈழம் ஆகிய இரு நாடுகளுக்குமிடையே நட்புறவும், ஒத்துழைப்பும் நிலவுவதற்கு வழிவகுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

"தமிழ் ஈழநாட்டை மீள அமைப்பதன்மூலம் இலங்கையில் உங்கள் அரசாங்கத்தினால் அடிப்படை மனித உரிமையாகிய குடியுரிமை பறிக்கப்பட்டு, அரசியல் அனாதைகளாக்கப்பட்டுக் கிடக்கும் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவும் முடியும்.

"ஏதோ குருட்டு அதிட்டத்தால், திருமதி சிறிமா பண்டாரநாயகா அவர்கள் அணிசேரா நாடுகளின் தலைவியாகவும், நீங்கள் ஐ. நா. பொதுச்சபைத்தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுவிட்டீர்கள் என்று எவருமே கூறமுடியாதபடி—நீங்கள் ஐ. நா. பொதுச் சபையின் தலைவராக இருக்கும் காலத்தில் இதுவரை மனித உரிமைப் பிரகடனத்தில் கையெழுத்திடாமலிருக்கும் நாடுகள் அவற்றில் கையெழுத்திடும் வண்ணம், நீங்கள் முன்னின்று வழிகாட்டத்தவறமாட்டீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்!"

## 'காங்கேசன்துறை இடைத்தேர்தல் தீர்ப்பே தமிழினத்தின் அபிலாசைகளின் பிரதிபலிப்பு!'

### கலாநிதி தகநாயக்கா சொல்கிருர்!

"காங்கேசன்துறை இடைத்தேர்தல், தீர்ப்பு கிடைத்தபோதே—தமிழ் மக்களின் அபிலாஷைகள் தெளிவாகத் தெரிந்துவிட்டது! அந்தச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் பயன்படுத்தி தமிழர்களின் உரிமைகளை வழங்கியிருக்க வேண்டும். அதையும் அரசு தவறவிட்டுவிட்டது!"

இவ்வாறு கலாநிதி தகநாயகா அவர்கள் 'இன்டிப்பெண்டன்ற்' ஆங்கில ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். அக்கட்டுரையில் திரு. தகநாயகா மேலும் எழுதியிருப்பதாவது:—

"1972ம் ஆண்டு புதிய குடியரசு அரசியலமைப்பை உருவாக்கிய குழுவில் ஒருவராகப் பணியாற்றிய நீதியமைச்சின் செயலாளர் திரு, நிஹால் ஜெயவிக்கிரமா அவர்கள், "அரசியல் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டுமா?" எனும் தலைப்பில் முக்கிய கட்டுரையொன்றை எழுதியிருக்கிருர்.

"தமிழ் மக்களின் அபிலாஷைகள் முறையாகவும் சட்டபூர்வமாகவும் அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்யவேண்டும் என்ற முக்கியமான கருத்து ஒன்றை அவர் தனது கட்டுரையில் முன்வைத்துள்ளார்.

"அத்தகைய திருத்தம் ஒன்று அரசியல் அமைப்பில் சேர்க்கப்படுவதை இலங்கையில் உள்ள எந்த ஒரு அரசியல் மாணவனும் எதிர்ப்பான் என்று நான் கருதவில்லை.

இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாறியுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சி, இத்தகைய விதி அரசியலமைப்புத்திட்டத்திலிடம்பெற வேண்டுமென்று, அரசியல் நிர்ணய சபையில் மிகவும் உக்கிரமுடன் போராடியது. ஆனால் அதன் [illegible] இதன் பெறுபேருக

—இந்தப் பிரச்சினைமீது தமது தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களை தமிழர் கூட்டணியினர் பதவி விலகச் செய்தனர்.

அந்தச்சமயத்தில் தமிழர் கூட்டணியினரின் கோரிக்கை நியாயமானது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆனல் தமிழர் கூட்டணியின் நியாயமான இக்கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்கொலிபோலப் போகுமளவுக்கு அரசாங்கம் தான் பலசாலியாக இருப்பதாக அந்தநேரத்தில் கருதிக் கொண்டது. திரு. செல்வநாயகம் பிரதிநிதித்துவம் வகித்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்தாமல் காலம்கடத்தி வந்தது.

"ஆனல் மேற்படி இடைத்தேர்தல் நடைபெற்று தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டபோது—இந்த இடைத்தேர்தலின் முடிவை, தமிழ் மக்களின் தீர்ப்பாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தையும், அரசாங்கம் உதாசீனம் செய்துவிட்டது.

"இப்போது, நீதியமைச்சின் செயலாளர் தமிழர்களுக்கு நீதி வழங்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிருர். திரு. நிஹால் ஜெயவிக்கிரமாவின் வேண்டுகோளை அதிகாரத்திலிருக்கும் அரசாங்கம் ஏற்கும் என்று எதிர்பார்க்கிறேன்."

இவ்வாறு திரு: தகநாயகா எழுதியுள்ளார்.

## சிறையிருக்கும் இளைஞர் நிதிக்கு தமிழர் சால்புகழகம் அன்பளிப்பு!

சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் குடும்ப — சட்ட உதவிநிதிக்குகொழும்பிலுள்ள தமிழர் சார்புக்கழகம் ரூபா 1250-00ஐ திரு. ஈழவேந்தன் மூலமாக அண்மையில் கையளித்துள்ளது.

## மகளிர் பேரவை பிரார்த்தனை!

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக் கிளையினர் தமிழ்ஈழ சுதந்திரம்வேண்டி நடத்திவரும் வாராந்தப் பிரார்த்தனை 28-1-77 வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறும்.

## யாழ்ப்பாணம் இல்...

—1-ம் பக்கத் தொடர்

துக்கு கொடுத்தவர்கள் யார்? இலங்கையின் உல்லாசப் பிரயாணச்சபையா? அல்லது இதற்கு யார் பொறுப்பு என்று கேட்கின்றோம்!

தனது தவறை மேற்படி நிறுவனம் திருத்திக் கொள்ளுமா?

## இந்துசமய வகுப்புக்கள்

மட்டக்களப்பு இந்துசமய விருத்திச்சங்கம் 30-1-77 இல்லிருந்து மீண்டும் சைவ சமய பாடவகுப்புக்களுடன் பல புதிய வகுப்புக்களையும் ஆரம்பித்து நடத்தவிருக்கிறது.

சமயபாடம், தமிழ், பண்ணிசை, புராணம் ஆகிய துறைகளில் பாடங்கள் இடம்பெறும். மட்டக்களப்பு ஆனைப்பந்தி இ. கி. ச. பெண்கள் மகாவித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8-15 முதல் 11-30 வரை இவ்வகுப்புக்கள் நடைபெறும். — இவ்வாறு மேற்படி சங்க செயலாளர் திரு. வி. த. குமாரசுவாமி அறிவிக்கிருர்.

## பேனு நண்பர்கள் தேவையா?

பர்மாவைச் சேர்ந்ததமிழ் உணர்ச்சியும், ஆர்வமும் மிக்க பின்வரும் நண்பர்கள். இங்குள்ள தமிழ் நண்பர்களுடன் தொடர்புகொள்ள விரும்புகின்றுர்கள். விரும்பினோர் தொடர்புகொள்ளலாம்.

R. Rajavellu
Moon shwe yichroot shop
Railway station
Pegu, Burma

● இவர், பேகு என்ற இடத்தில் தமிழ் பாடசாலை தமிழ்நூலகம் என்பவற்றின் இயக்குநர்.

S. Thangavelan,
Uaung Tin
No, 24, sayedan
Bauktaw
Pyithaya post
Yankin
Rangoon Burma,

● இவர் பர்மா சுத்த சன்மார்க்க சங்கத் தலைவரும் "திருவருட்பா" ஆசிரியருமாவார்.

S. P. Sivanesan,
C/o S. S. Pandian
No, 31,Mingala St(Best-St)
Thingangyun,
Rangoon, Burma,

இவர்கள் இலங்கை நண்பர்களுடன் தொடர்பு கொள்ள மிகவும் ஆவலாக உள்ளனர்.

நேரம் பெறுமதியானது.
பணத்தையும், நேரத்தையும் மிச்சப்படுத்த மில்க்வைற் சலவைப்பவுடர் பாவியுங்கள்.

ஒரு இருத்தல் பைக்கட்
ரூ. 3-50 சதம் மட்டுமே

ஒரு மில்க்வைற் தயாரிப்பு

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் ஜனவரி மாதம் - 26 திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org